# தமிழ் அற இலக்கியங்களில் கொல்லாமைச் சிந்தனைகள்

**மு.முவின்,**
**உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை**
**ஆர்விஎஸ்கலைஅறிவியல்கல்லூரி, கோவை - 641402, தமிழ்நாடு, இந்தியா**

**ஆய்வுச்சுருக்கம்** :

உலக மக்களின் முன்னேற்றத்திற்கான பாதையை வகுத்துக் கொடுப்பதில் அற இலக்கியங்களின் பங்குஅதிகமாக உள்ளது.பலநன்னெறிகள் , உலகின் உன்னதமான வாழ்க்கைக்குமனிதனைஇட்டுச்செல்லும்நிலையில், தமிழிலும் பல அற இலக்கியங்கள் மனித வாழ்வின் உயர்ந்த அறங்களைப்போதிக்கின்றன . அனைத்துஅறங்களுக்கும் அடிப்படையான ஓர் அறமான , பிற உயிர்களைக்காத்தல் மற்றும் மதித்தல் எனும் தகுதியை உடைய கொல்லாமை எனும் அறம் உயர்வு மிக்கதாக கருதப்படுகிறது. மனிதன், விலங்குகள், பூச்சிகள், பறவைகள் ஆகியவற்றைக் கொல்லாதிருத்தல் கொல்லாமையாகும் . எக்காரணம் கொண்டும் எவ்வுயிரையும் கொல்லாது அனைத்து உயிர்களுக்குமான உரிமையான உயிர்வாழும் உரிமையை உறுதி செய்தல் மனிதன் எனும் பண்பட்ட இனத்தின் ஆகப்பெரும் பண்பாட்டு உச்சமாகும் . மனிதனின் பண்பட்டமனத்திற்குத் தக்கசான்றாகத் திகழ்வது கொல்லாமைச் சிந்தனையாகும். இன்று உலகில் கொலைகள்அதிகஅளவில் நிகழ்கின்றன. இதைத் தவிர்த்து , தனிமனிதன் மகிழ்ச்சியுடன்வாழவும், பிற உயிர்களை வாழவிடுவதற்கும் , கொல்லாமைஎனும் உயர்நெறி அவசியமாகிறது. ஒவ்வொரு தனிமனிதனும் கொல்லாமை எனும் சிந்தனையுடன் இருத்தல் என்பது இன்று காலத்தின் தேவை என்பதன் முக்கிய அடிப்படையில் , இத்தகைய கொல்லாமை தமிழ்ச் சமூகத்தில் தோன்றியபிறகு, காலத்தை வரையறுக்கும் அளவிற்கு நிலை பெற்ற சங்கம்மருவிய கால இலக்கியங்கள், அதாவது நீதி இலக்கியங்கள் பல்வேறு பட்ட அறங்களை வலியுறுத்தும் போதிலும் , கொல்லாமை எனும் உயர்ந்த அறத்தின்முக்கியத்துவத்தையும் , தமிழ்அறஇலக்கியங்களில்அவ்வறம் வலியுறுத்தப்பட்டிருக்கும் கருத்தாக்கத்தையும் தெள்ளிதின் ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாக அமைகிறது.

**குறிச்சொற்கள்** : கொல்லாமை, அறம், இலக்கியங்கள், நன்னெறிகள், மனிதன்


© 2024, IRJTSR 

**முன்னுரை:**

கொல்லாமை என்பது வெறும் அறநெறி என்று கூறுவது பொருந்தாது இதை ஆன்மநேயநெறி என்றும் குறிப்பிடலாம் . அதாவது அனைத்து உயிர்கள் மீதும் கருணை காட்டுவதாகும். உயிர்கள் அனைத்தும் பொதுவில் இனிதுற வாழவேண்டுமாயின் அதற்கு அடிப்படையாக அமைய வேண்டியவை அன்பும், கருணையுமே. இத்தகைய அன்பையும் கருணையும் ஒருசேர வலியுறுத்துகின்ற தூய நெறி கொல்லாமையாகும்.தமிழ்ச்சமூகத்தில் அன்பையும் கருணையையும் மையமிட்டுப் பல அறக்கருத்துக்களை தமிழ்ச்சான்றோர்கள் அறிவுறுத்தியுள்ளனர் . அன்பு மற்றும் கருணையின் விளைவாகப் பிறந்திட்ட உயிர்நேய நெறியாம்கொல்லாமை தமிழ்ச் சமூகத்தில் எவ்வாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்பதைத் தமிழ் அறஇலக்கியங்களைக் கொண்டு ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்

**கொல்லாமை ஓர் அறமாகக் காரணங்கள்:**

எந்தவொரு நிகழ்வால் மனித சமூகம் பாதிக்கப்பட்டதோ. அதிலிருந்து பாடம் கற்று விழிப்புணர்வு பெற்று , பண்பட்ட நிலைக்கு வந்துவிடுகிறது. அவ்வாறே கொலை எனும் செயலும் மனித சமூகத்தில் நிம்மதியின்மையை ஏற்படுத்தியிருக்கும். அதன் விளைவாக அனைத்து உயிர்களுக்கும் கொலை மீது வெறுப்புணர்வு ஏற்பட்டு, கொல்லாமை ஓர் அறமாக வலியுறுத்தப்பட்டிருக்க வேண்டும் . இதனை நிறுவும் விதமாக,

**“ வீரயுகத்தில் ஏற்பட்ட போர்களினால் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். இறந்த ஆணின் மனைவி மற்றும் குடும்பத்தினர் ஆதரவற்றவர்களாய் ஆனார்கள். மிகவும் இளவயதிலேயே மணவாழ்க்கையை இழக்கும் நிலை பெண்களுக்கு இருந்தது. இதனால் மக்களிடையே போர் மறுப்புச் சிந்தனை தோன்றலாயிற்று. கொல்லாமை அறத்தை வலியுறுத்த இதுவும் ஒரு காரணமாக அமைந்தது ” ( மாதவன்சு, தமிழ்அறஇலக்கியங்களும், பௌத்தசமணஅறங்களும்ப. 162 )**

என்கிறார், முனைவர் சு.மாதவன்

**புறநானூற்றில் கொல்லாமை:**

கொல்லாமை, ஈகை, உயிர்நேயம் போன்ற அறங்களை வலியுறுத்துகின்ற அற இலக்கியங்கள் மட்டுமல்ல,புறநானூற்றின் பொதுவியல் திணை, செவியறிவுறுத்தல் போன்றவையே தமிழ் அற இலக்கியங்களுக்குத் ஒரு தோற்றுவாயாக அமைகின்றன.அவ்வகையில் புறநானூற்றிலே கொல்லாமைச் சிந்தனைக்கான கூறுகள் இடம்பெற்றுள்ளன.

புறநானூற்றில் இடம்பெற்றுள்ள துணைவஞ்சி எனும் துறையானது, போரைத் தவிர்க்குமாறு அறிவுறுத்தலும், சினத்துடன் கொல்லக் கருதியவனை அமைதிப்படுத்தலும் ஆகும். துணைவஞ்சித்துறையின் மூலம், புலவர் கோவூர்கிழார் மன்னர்களிடம் கொலையைத்தவிர்க்கும்படி வலியுறுத்தியமைக்கான பாடல்கள் பின்வருமாறு,

**தடுக்கப்பட்ட சிறுவர் கொலை :**

**“இவரே புலன் உழுது உண்மார் புன்கண் அஞ்சித்**

**தமது பகுத்து உண்ணும் தண்ணிழல் வாழ்நர்:**

**களிறு கண்டு அழூஉம் அழாஅல் மறந்த**

**புன் தலைச் சிறாஅர்; மன்று மருண்டு நோக்கி**

**விருந்தின் புன்கணோ உடையர் ;**

**கேட்டனை ஆயின், நீ வேட்டது செய்ம்மே” ( பாலசுப்ரமணியன்குவெ, புறநானூறு 1, ப. 127 )**

இப் பாடலில், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், மலையமான் மக்களை யானைக் காலில் இடறி வீழ்த்தக் கருதியபோது, புலவர் கோவூர்கிழார் , மன்னனிடம், சிறுவர் யானையைக் கண்டு அழுகை மறந்து நிற்கின்றனர். மேலும், புதிய வருத்தம் அடைந்துள்ளனர். எம்மொழி கேட்டாயானால் விரும்பியது செய்க என உட்பொருள் வைத்து சிறுவர்களைக் கொலை செய்யாதே எனும் நோக்கில் பாடியுள்ளார்.

**தடுக்கப்பட்ட புலவர் கொலை :**

**“வரிசைக்கு வருந்தும் இப்பரிசில் வாழ்க்கை**

**பிறருக்கு தீது அறிந்தன்றோ ? இன்றே; திறப்பட**

**நண்ணார் நாண, அண்ணாந்து ஏகி,**

**ஆங்கு இனிது ஒழுகின் அல்லது ஓங்குபுகழ்**

**மண் ஆள் செல்வம் எய்திய**

**நும்மோர் அன்ன செம்மலும் உடைத்தே " ( பாலசுப்ரமணியன்குவெ, புறநானூறு 1, ப. 129 )**

எனும் பாடலில், நலங்கிள்ளியை விட்டு நீங்கி இளதத்தனார் என்னும் புலவர், சோழன் நெடுங்கிள்ளியிடம் வந்தபோது, இளத்தனாரை ஒற்றன் என்று கருதி கொல்லத் துணிந்த நெடுங்கிள்ளியிடம் புலவர் கோவூர்கிழார், குற்றமற்ற சொற்களால் பாடிப் பரிசில் பெற்றுஅப்பரிசிலைத் தம் சுற்றத்தினருக்குத் தந்து வாழ்பவர், இவருடைய வாழ்க்கை பிறருக்குத் தீமை செய்யுமா எனில் செய்யாது. இத்தகையதே நின் புகழும், மண்ணாளும் செல்வமும் பகைவருக்கு நாணாது. எனவே புலவர் இளதத்தன் பண்பால் நும்மோர் அன்ன செம்மல் என்று கூறி அவரைக் கொலையிலிருந்து காக்கிறார்.எனவே , இவற்றைக்கொண்டுபுறநானூற்றிலேயேகொல்லாமைக்கானகூறுகள்இருந்துள்ளமையைஅறியமுடிகிறது.

**அற இலக்கியங்களில் கொல்லாமை** :

பொய்யாமை, கள்ளுண்ணாமை, பிறன்மனை விரும்பாமை, கொல்லாமை, புலால் உண்ணாமை போன்ற அறநெறிகள் பொதுவான அறங்களாக அறநூல்களால் சுட்டப்படுகின்றன. இவற்றுள் கொல்லாமை எனும் அறத்தை, திருக்குறள், நாலடியார், பழமொழி நானூறு, நான்மணிக்கடிகை, திரிகடுகம், சிறுபஞ்சமூலம், ஏலாதி , இன்னா நாற்பது, இனியவை நாற்பது , முதுமொழிக் காஞ்சி போன்ற பத்து அறநூல்கள் வலியுறுத்துகின்றன.

**திருக்குறளில் கொல்லாமை** :

உலகப் பொதுமறை என்று அழைக்கப்படுகிற திருக்குறள், மனித சமூக மேம்பாட்டிற்கு அன்புடைமை, இன்னா செய்யாமை, அருளுடைமை போன்ற பல அறங்களைத் தந்து வழிகாட்டுகிறது. அவ்வகையில் திருக்குறள் குறிப்பிடும் கொல்லாமை குறித்த குறட்பாக்கள் பின்வருமாறு.

**" ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றுஅதன்**

**பின்சாரப் பொய்யாமை நன்று"( புலியூர்க்கேசிகன், திருக்குறள், ப 71 )**

எனும் குறள் இணையற்ற ஓர் அறம் கொல்லாமை. பொய்யாமை அதற்கடுத்த நிலையில் வைத்துப் போற்றத்தக்கதாகும் என்றுகூறுகிறது.

**"அறவினை யாதெனில் கொல்லாமை கோறல்**

**பிறவினை எல்லாம் தரும் "( புலியூர்க்கேசிகன், திருக்குறள், ப 71 )**

எனும் குறளில், அறச்செயல் என்பது எவ்வுயிரையும் கொல்லாது இருத்தல் மற்றும் கொலை என்பது அறமற்ற அனைத்து தீவினைகளையும் தரும் என்று கூறியுள்ளார் திருவள்ளுவர்.

**நாலடியாரில்கொல்லாமை:**

திருக்குறளைப் போன்று நாலடியாரும் அறம் , பொருள், இன்பம்என்றமுப்பால் பகுப்புகளைக் கொண்டுள்ளது. இந்நூலில் பொருட்பாலில் இடம்பெற்றுள்ள பேதமை எனும் அதிகாரத்தின் கீழ்வரும் பாடல் பின்வருமாறு,

**"கொலைஞர் உலை ஏற்றித் தீ மடுப்ப**

**நிலையறியாது அந்நீர் படிந்தாடியற்றே**

**கொலைவல்கொடுங்கூற்றங்கோள்பார்ப்ப, ஈண்டை**

**வலையகத்துச் செம்மாப்பார் மாண்பு "( சரவணன்ப, நாலடியார், ப 273 )**

எனும் பாடல், கொலைத் தொழில் வல்லவனாகிய கூற்றுவன், மனித உயிர்களைக் கவரும் பொறுப்புடன் இருக்க, மனிதர்களோ பற்று எனும் வலையில் சிக்கி மகிழ்கின்றனர். இவ்வியல்பு எத்தகையதென்றால் கொலை செய்தவர் உலைநீரில் ஆமையை இட்ட நிலையில் , அதன் உள்ளிருக்கும் ஆமை ஆடுவதைப் போன்று பேதமையானது என்கிறது.

மனித உயிர்களைக் கவருவதற்கு கூற்றுவன் கடமைப் பொறுப்பில் காத்துக்கொண்டிருக்க, மனித உயிர்களைக் கொன்று மகிழ்ந்து திரிவது பேதமை எனும் நோக்கில் மறைமுகமாக இப்பாடலில் கொல்லாமை வலியுறுத்தப்பட்டுள்ளதை அறியமுடிகிறது.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*
© 2024, IRJTSR

**பழமொழி நானூற்றில் கொல்லாமை:**

பழமொழி நானூற்றில் இடம்பெற்றுள்ள கொல்லாமை குறித்த பாடல் பின்வருமாறு

**“செறலின் கொலைபுரிந்து, சேண் உவப்பர் ஆகி**

**அறிவின் அருள்புரிந்து செல்லார் - பிறிதின்**

**உயிர்செகுத்து, ஊன்துய்த்து ஒழுகுதல், ஓம்பார்**

**தயிர் சிதைத்து மற்றொன்று அடல் ”( மாணிக்கவாசகன்ஞா, பழமொழிநானூறு, ப 338 )**

எனும் இப்பாடல்,பிற உயிர்களுக்கு அறிவினால் அருள் செய்து மறுமையில் இன்பத்தை அடையாமல், அறிவின் மயக்கத்தால் உயிர்களைக் கொலை செய்து , மறுமையில் இன்பத்தை அடையப்போவதாக மகிழ்வதும் , பிறிதொன்றின் இனிய உயிரை நீக்கி , புலாலை மணம் பொருந்தி உண்டொழுகுவதும், உடலைப் பாதுகாவாதார்சுவை கருதித் தயிரை அழித்து, வேறொரு உணவாக. உதாரணமாக (மோர்க் குழம்பு) மாற்றிச் சமைத்தலோடு ஒக்கும் என்று கூறுகிறது.

மேல்குறிப்பிட்டுள்ள பாடல் ஒருசேர கொலையைக் கண்டித்தும் , வேள்வியை மறைமுகமாக விமர்சிக்கவும் செய்கிறது. மறுமையில் இன்பம் வேண்டுவோர், கொலை புரியாது, வேள்வி செய்யாதுஅறிவினால் அருள் புரிவர் என்றும் கூறுகிறது

**நான்மணிக் கடிகையில் கொல்லாமை:**

நான்மணிக் கடிகையில் இடம்பெற்றுள்ள கொல்லாமைச் செய்திகள் பின்வருமாறு

**“அலைப்பான் பிற உயிரை ஆக்கலும் குற்றம் ”( இராசாராம்துரை, பதினெண்கீழ்கணக்கு3 , ப25 )**

எனும் பாடல், கொல்வதற்காக பிற உயிரை வளர்ப்பது குற்றமென்று கூறி கண்டிக்கிறது.

**“இனிதுண்பான் என்பான் உயிர்கொல்லாது உண்பான் ”( இராசாராம்துரை, பதினெண்கீழ்கணக்கு 3 , ப40 )**

எனும் பாடல், கொல்லாமை அறத்தின் செயன்மைக்கூறான புலால் உண்ணாமையை விமர்சிக்கிறது.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*
© 2024, IRJTSR

**“எல்லா இடத்தும் கொலை தீது ”( இராசாராம்துரை, பதினெண்கீழ்கணக்கு3, ப 54 )**

எனும் பாடல், என்ன காரணத்திற்காகக் கொலை நிகழ்த்தினாலும் அதை எவ்விடத்தில் (கோவிலில்) நிகழ்த்தினாலும் தீது என்று கண்டிக்கிறது.

**திரிகடுகத்தில்கொல்லாமை:**

திரிகடுகம் எனும் அறநூல் கொலைத் தொழில் புரிபவரை, கொல்லாமையை வலியுறுத்தும் ஒவ்வொரு பாடலிலும் விமர்சிக்கிறது. அப்பாடல்கள் பின்வருமாறு.

**“ ……………………………………………………………………ஆருயிரைக்**

**கொல்வது இடைநீக்கி வாழ்வானும் ”( இராசாராம்துரை, பதினெண்கீழ்கணக்கு 3, ப 18 )**

**“ஊனுண்டு உயிர்கட்கு அருளுடையேன் என்பானும்**

**……………………………………………………………………..**

**தாமுறுவேள்வியில் கொல்வானும்”( இராசாராம்துரை, பதினெண்கீழ்கணக்கு 3, ப 23 )**

**“கொல்வது தான் அஞ்சான் வேண்டலும்**

**……………………………………………………………………….**

**முழுமக்கள் ஆகற்பாலார்”( இராசாராம்துரை, பதினெண்கீழ்கணக்கு 3, ப44 )**

**“கொலை நின்று தின்றொழுகுவானும்…**

**……………………………………………………………………….**

**யாதும் கடைபிடியா தார் ”( இராசாராம்துரை, பதினெண்கீழ்கணக்கு 3, ப39 )**

மேற்குறிப்பிட்டுள்ள பாடல்களில் உயிர்களைக் கொன்று, உண்டு தாம் உயிர்களிடத்தில் அன்புடன் இருப்பதாகக் கூறுபவரும் , கொலைஎனும்அச்சத்தால், பிற உயிர்களை நடுங்கச் செய்து வாழ்பவரும், முழுமக்கள் ஆகார் என்று விமர்சிக்கப்பட்டுள்ளனர்.

**ஏலாதியில்கொல்லாமை:**

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*
© 2024, IRJTSR 

ஏலாதியில் இடம்பெற்றுள்ள கொல்லாமை குறித்த பாடல் பின்வருமாறு.

**“கொலைக்களம் வார்குத்துச் சூதாடும் எல்லை**

**அலைக்களம் போர்யானை ஆக்கும்- நிலைக்களம்**

**முச்சாரிகை ஒதுங்கும் ஓரிடத்தும் இன்னவை**

**நச்சாமை நோக்காமை நன்று ”( இராசாராம்துரை, பதினெண்கீழ்கணக்கு 3, ப 16 )**

இப்பாடல் கொலைக்களம் வெள்ளம் பெருகிய நீர்நிலை, சூதாடும் இடம், சிறைச்சாலை,போர் செய்ய யானைகளைப் பழக்கும் இடங்கள் இவற்றை விரும்பாமல் இருத்தலும்சென்று பார்க்காமல் இருப்பதும் நன்று என்கிறது. மேற்ச்சுட்டிய தீமையான இடங்களில் முதன்மையான இடமாக கொலைக் களம் எனப்படும் கொலை நிகழும் இடம் உள்ளது. இப்பாடல் கொலைவெறுத்து, கொலை நிகழும் இடத்தை விரும்பாமல் இருக்கவும், பார்க்காமல் இருக்கவும் வலியுறுத்துகிறது.

**இன்னாநாற்பதில்கொல்லாமை:**

இன்னா நாற்பதில் இடம்பெற்றுள்ள கொல்லாமை குறித்த செய்யுள் வரிகள் பின்வருமாறு

**“வெள்ளம் படு மாக்கொலை இன்னா ”( இராசாராம்துரை, பதினெண்கீழ்கணக்கு 3, ப 107 )**

எனும் வரியில் நீர்ப் பெருக்கில் அகப்பட்டு வருந்தும் விலங்கைக் கரையேறஅனுமதிக்காது தடுத்துக் கொல்லுவது துன்பம் எனும் நோக்கில் கொல்லாமை வலியுறுத்தப்பட்டுள்ளது.

**இனியவை நாற்பதில் கொல்லாமை :**

இனியவை நாற்பதில் இடம்பெற்றுள்ள கொல்லாமை குறித்த பாடல் வரி பின்வருமாறு.

**“கொல்லாமை முன் இனிது ”( இராசாராம்துரை, பதினெண்கீழ்கணக்கு 3, ப 68 )**

இவ்வரியில், ஒரு உயிரைக் கொல்லாது இருத்தல் இனிமை எனும் பொருளில் கொல்லாமை வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்
© 2024, IRJTSR

**முதுமொழிக்காஞ்சியில்கொல்லாமை :**

முதுமொழிக் காஞ்சியில் இடம்பெற்றுள்ள எளியபத்து கீழ்வரும் கொல்லாமை பற்றிய பாடல் என்னும் அதிகாரத்தின் பின்வருமாறு,

**“சார்பி லோருக்(கு)உறு கொலை தீது ”( இராசாராம்துரை, பதினெண்கீழ்கணக்கு 3, ப 188 )**

இப்பாடல் வரி, நல்லினத்தார் சேர்க்கை இல்லாதவர் கொலைத் தொழிலை எளிதாகச் செய்வார் என்று கூறுகிறது. இது, கொலையைக் கண்டித்து மறைமுகமாக, நல்லினத்தார் சேர்க்கை உள்ளவர் , கொலைத் தொழிலைச் செய்வதற்கு விரும்பமாட்டார் எனும் பொருளைத் தருகிறது.

**சிறுபஞ்சமூலத்தில்கொல்லாமை :**

பண்புடைமை, அறிவுடைமை, பொய்யாமை, கள்ளுண்ணாமை, தவம்போன்றவைசான்றோர்களதுபண்புகளாகஇருப்பதுபோல, அன்பைஅடிப்படையாக்கொண்டகொல்லாமை அறமும் , சான்றோரதுபண்புஎன்றுசிறுபஞ்சமூலம்குறிப்பிடுகின்ற பாடல்கள்பின்வருமாறு,

**“ ……………………………….நன்குணர்ந்தார்**

**என்பெறினும் கொல்லார் இயைந்து ” ( மாணிக்கவாசகன்ஞா, சிறுபஞ்சமூலம்,ப 58 )**

**“ ……………………..கொல்லானேல்பல்லவர்**

**ஓத்தினால் என்ன குறை ” ( மாணிக்கவாசகன்ஞா, சிறுபஞ்சமூலம், ப 92 )**

மேற்குறிப்பிட்ட பாடல்கள், சான்றோர் பொன், பொருள்பெற்றாலும், கொலையைச் செய்யமாட்டார்கள் என்று ம், உயிர்க்கொலைசெய்யாதுவாழ்பவன் கொல்லாமை என்னும் பண்பால் சான்றோனாகத்திகழும்போது , நூலறிந்தபெரியோர் ஆக்கி வைத்துள்ள நூல்களால்அறிந்துகொள்ள வேண்டியது என்ன உள்ளது ? என்றும் வினவுகிறது.
இவ்வாறுகொல்லாமைஎன்றசிந்தனையுடையவன்மேலும்பண்புகளாகஅறிந்துகொள்ள வேண்டியவைஎவையுமில்லைஎன்பது குறிப்பாகஅமைகிறது.

**“ ………………………………….பாற்பட்டார்**

**ஏற்றவாறு இன்புற்று வாழ்வன ஈடழியக்**

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிர்காலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

**கூற்றுவப்பச் செய்யார் கொணர்ந்து " ( மாணிக்கவாசகன் ஞா, சிறுபஞ்சமூலம், ப 93 )**

எனும்பாடல், நன்னெறியின்வழிச் செல்லும்சான்றோர் , பழி, பாவத்தைஏற்க விரும்பாமல், கூட்டத்தோடு இன்பமாக வாழ்கின்ற விலங்கு, பறவைபோன்றஉயிர்களைஅவற்றின்பெருமைகுன்றக்கொன்று, எமனுக்குவிருந்தாக்கமாட்டார்கள்என்றுகூறுகிறது.

**மறுபிறவிஇல்லை :**

**"ஓர்த்துடம்புபேருமென்றுஊன்அவாய்உண்ணானேல்**

**பேர்த்துடம்புகோடல்அரிது " ( மாணிக்கவாசகன் ஞா , சிறுபஞ்சமூலம்,ப 31 )**

எனும்சிறுபஞ்சமூலப்பாடல் , உடம்புஇளைக்கும்எனவருந்திஊனைஉண்ணத்தொடங்காமல்இருப்பவன், மீண்டும்உடலெடுத்தல்( மறுபிறவி ) அரிதுஎன்றுகூறுகிறது.

**"ஊன்மறுத்துக்கொள்வானேல்உடம்புஎஞ்ஞான்றும்**

**தான்மறுத்துக்கொள்ளான்தளர்ந்து" ( மாணிக்கவாசகன் ஞா,சிறுபஞ்சமூலம், ப 33 )**

எனும்சிறுபஞ்சமூலப்பாடல்ஊன்உண்ணாதவன்பிறவித்துயரைஅடையமாட்டான்என்று கூறுகிறது.

**" உடம்பின்ஆர்வேலிஒருப்படுத்துஊன்ஆரத்**

**தொடங்கானேல்சேறல்துணிவு " ( மாணிக்கவாசகன் ஞா,சிறுபஞ்சமூலம், ப 44 )**

எனும்சிறுபஞ்சமூலப்பாடல், உயிரெனும்வேலிஅமைத்துப்பாதுகாத்தஉடம்பை, அவ்வுயிராகியவேலியைநீக்கிஉயிரைக்கொல்லாமலும், கொன்றஉயிரின்சதையைத்தின்னாமலும்இருப்பவன்உயர்கதிஅடைதல்உறுதிஎன்றுகூறுகிறது.

**முடிவுரை:**

- போரின் பெருமைகளைக் கூறும் புறநானூற்றில், சில நிலைகளில் புலவர் கோவூர்கிழார் போரைத் தடுத்தும் கொலைகளைத் தவிர்க்க வலியுறுத்தியதையும் உணரமுடிகிறது.
- தமிழ் அற இலக்கியங்களில், ஆசாரக்கோவை தவிர பிற அற இலக்கியங்கள் அனைத்தும் கொல்லாமையை வலியுறுத்துவதை என்பதை அறியமுடிகிறது.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

- மனிதவாழ்வில், உயர்கதியைஅடையவிரும்புவோர்கொல்லாமைநெறியைப்பின்பற்றுவதுஅவசியமானதுஎன்பதைஅறஇலக்கியங்கள்வலியுறுத்துகின்றன.
- சிலநிலைகளில், கொலைபுரிபவர்களையும், பிறஉயிர்களைக்கொன்றுஉண்பவர்களையும் விமர்சித்து, கண்டிப்புடன்கொல்வாமையைவலியுறுத்துவதைஉணரமுடிகிறது.

## துணைநூற்பட்டியல் :

[1] இராசாராம்துரை ( உஆ ), பதினெண்கீழ்க்கணக்கு 1,3, ( மூஉ ), முல்லைநிலையம், சென்னை, 2007
[2] சரவணன்ப ( உஆ ), நாலடியார் ( மூஉ ), சந்தியாபதிப்பகம், சென்னை, 2015
[3] பாலசுப்ரமணியன்குவெ, ( உஆ ), புறநானூறு 1 ( மூஉ ), நியூசெஞ்சரிபுக்ஹவுஸ், சென்னை, 2014
[4] புலியூர்க்கேசிகன் ( உஆ ), திருக்குறள் ( மூஉ ), பூம்புகார்பதிப்பகம், சென்னை, 2010
[5] மாணிக்கவாசகன்ஞா, ( உஆ ), சிறுபஞ்சமூலம் ( மூஉ ), சென்னை, 2016
[6] மாணிக்கவாசகன்ஞா, ( உஆ ), பழமொழிநானூறு ( மூஉ ), உமாபதிப்பகம், சென்னை, 2007
[7] மாதவன்சு, தமிழ்அறஇலக்கியங்களும்பௌத்தசமணஅறங்களும், நியூசெஞ்சரிபுக்ஹவுஸ், சென்னை 2017

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்
© 2024, IRJTSR